தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in
முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 309/மா/2025
நாள் 07.10.2026

P.உத்ரியநாதன்,
சென்னை–42. --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர் (முதுநிலை),
மண்டலம் 13,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 042, வேளச்சேரி, நேருநகர், கே.வி.கே சாமி தெரு, கதவு எண் 1A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.உத்ரியநாதன் என்பவரின் 07.04.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 08.04.2025 அன்று பெறப்பட்டு 309/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–600 042, வேளச்சேரி, நேருநகர், கே.வி.கே சாமி தெரு, கதவு எண் 1A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.உத்ரியநாதன் தனது 07.04.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"(1) V.G.P. Housing Private Limited developed the layout in to housing plots in S.No.317/1A1 of Velachery Village, Saidapet Taluk, now within the limits of Chennnai Corporation and the said layout was approved by the Deputy Director of Town Planning, Madras Chengelpet Region under Approval No.16/73 dated 22.03.1978. The layout named as "VGP Selva Nagar".

(2) The said layout was formed into 208 housing plots, roads and including an area of reserved school area and children play area. Under the approved layout plan, there is an area on the eastern side of the layout has a total extend of about 32620 Sq.Ft. and 15840 Sq.Ft. as children play area, which are marked as common park and children play space respectively, on the western side of the layout has a total extent of about 23900 Sq.Ft. as children play area, which is marked as children play space. The V.G.P. Housing Private Limited executed Gift Deed dated 22.03.1978 in favour of Velachery Panchayat, Chengelpet District and gifted 382855 Sq.Ft. of land to the Velachery Panchayat, forming as common Road, Park and children play area. The school area of total extent of

12,000 Sq.Ft. (hereinafter referred to as Schedule Property) in the layout was not gifted or handover to Velachery Panchayat, Chengelpet District by the V.G.P Housing Private Limited at the time of Gift deed dated 22.03.1978 and till today.

(3) The area layout extent of 12000 Sq.Ft. i.e Schedule Property was not given as gift to the Velachery Panchayat. The V.G.P. Housing Private Limited retains the school area of the layout extent of 12000 Sq.Ft. and the said V.G.P. Housing Private Limited is in possession of the school area in the layout of "V.G.P. Selva Nagar". The remaining plots were sold to different parties by the plaintiff. On 30.07.2014 officers of the Corporation of Chennai had inspected the schedule property area and marking measurements in the Schedule property area. No notice was given to the V.G.P. Private Limited by the Chennai Corporation befoe measuring the schedule property area. The officers of Chennai Corporation encroached the said schedule property of the V.G.P Housing Private Limited by way of trespass.

(4) The V.G.P Housing Private Limited filed a lawsuit before the City Civil Court, Chennai against The Commissioner, Corporation of Chennai & 2 Ors, numbered as O.S.No.4625 of 2014 for seeking a permanent injunction restraining the Corporation of Chennai and their servants or agents from any manner interfere and trespassing into the Schedule Property. The suit has been pending for ten years. The officers of the Chennai Corporation submitted their written statement but failed to appear before the court when the Hon'ble Court ordered the officials to produce documents, other than the Patta, to demonstrate that the school play area is designated as a children's park.

(5) The V.G.P Housing Private Limited, represented by Mr.V.G.Selvaraj, has authorized the Complainant to appear before the Hon'ble Court to manage the aforementioned case. The Authorization Letter dated 03.02.2020 has been marked as Exhibit A1 before the Hon'ble Court. The Complainant entered the box and provided evidence to demonstrate that the officers of the Chennai Corporation have deliberately encroached upon the property under the pretext of establishing a children's play area.

(6) The Hon'ble Court, after granting numerous opportunities to the officers of the Chennai Corporation to present evidence, noted their continued absence from proceedings. Consequently, the Hon'ble Court after hearing the Complainant side arguments, issued a final judgment and decree dated 15.06.2024 by granting permanent injunction restraining the Commissioner, Corporation of Chennai, The Assistant Commissioner, Corporation of Chennai, The Assistant Engineer, Zone 13, Corporation of Chennai, his men, agents, servants or agents from, in any manner interfere and trespassing into the suit property, otherwise than under the due process of law and for costs.

(7) The said decree dated 15.06.2024 was communicated to the 1st Respondent by the Complainant and gave representation that not to interfere the possession and remove all their movable properties from the Schedule Property. After giving them many representations the said 1st Respondent didn't even send a reply letter for the reasons know to them. The Scheduled Property was densely

populated with trees and branches, which led to numerous individuals trespassing onto the land to consume alcohol and engage in illegal activities. To prevent any future complications, the Complainant removed all the trees; however, the 1st Respondent, accompanied by 2nd to 4th Respondents, entered the Scheduled Property to obstruct the Complainant's work and harassed the Complainant.

(8) Despite the Hon'ble Court's Permanent Injunction decree dated 15.06.2024, the 1st Respondent has wilfully acted as if she is above the law, entered the Scheduled Property which is in direct violation of the Hon'ble Court's decree. To the further shock and surprise of the Complainant, the 2nd Respondent, who lacks jurisdiction over the Scheduled Property, accompanied the 1st Respondent and engaged in unruly behavior, thereby harassing the Complainant.

(9) The Complainant informed the Respondents and their associates of the Court's decree dated 15.06.2024 and cautioned them regarding the legal consequences of their actions; nevertheless, they continued to disregard the warnings. The Complainant was taken aback when the Respondents asserted that even if the Court were to issue a permanent injunctions, they believed it would not be binding upon them. This statement reflects a blatant disregard for the authority of the Court and the legal implications of such an order. The Respondent's position suggests an intention to ignore judicial directives, thereby undermining the rule of law and the enforcement of the Court's decisions.

Therefore, under these circumstances, the Complainant respectfully prays before the Hon'ble Tribunal for the following reliefs:

1. To issue an order directing the 1st,3rd & 4th Respondent and their servants or agents to refrain from entering the Scheduled Property and harassing the Complainant.
2. To direct the 1st Respondent to remove any play objects from the Scheduled Property.

   To initiate disciplinary action against the 1st to 4th Respondent for the violation of the Hon'ble Court's Decree dated 15.06.2024.

5. To initiate disciplinary action against the 2nd Respondent for entering the Scheduled Property, despite lacking jurisdiction and authority over the said Scheduled Property.
6. To pass any further or other order/s as this Hon'ble Tribunal may deem fit and proper in the circumstances of the case and thus render justice

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.05.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி உதவி ஆணையர் (முதுநிலை) மண்டலம் 13, அவர்கள் தனது 16.06.2025 மற்றும் 20.05.2026 நாளிட்ட கடித எண் மஅ13/ந.க. எண்.3503/2025–ன் அறிக்கைகளில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

திரு.உத்ரியநாதன் அவர்கள் அளித்த மனுவில் வேளச்சேரி கிராமம் வி.ஜி.பி. செல்வா நகர் மனைப்பிரிவு (மனைப்பிரிவு எண்.LPDM/DDTP No.16/73) வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் மூலம் கடந்த 1978ஆம் ஆண்டு 208 வீட்டு மனைப்பிரிவு உருவாக்கப்பட்டது என்றும், தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது போல் 382855 சதுர அடியில் கிழக்கு பக்கம் உள்ள மனைப்பிரிவில் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டு திடலுக்காக முறையே 32650 சதுர அடி மற்றும் 15840 சதுரடி ஒதுக்கப்பட்டதாகவும், மேற்கு பக்கம் உள்ள மனைப்பிரிவில் 23900 சதுரடி சிறுவர் விளையாட்டு திடலுக்காக ஒதுக்கப்பட்டதாகவும் இதில் 12000 சதுர அடி பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை தானமாக வழங்கவில்லை அல்லது வேளச்சேரி பஞ்சாயத்திற்கு இது நாள் வரை வழங்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறுவர் விளையாட்டு திடல் கட்டியதன் காரணமாக வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து (வழக்கு எண்.O.S.No.4625/2014, ஆணை நாள் 15.06.2024) இந்த வழக்கில் வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பை மதிக்காமல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ல் உள்ள அரசு அதிகாரிகள் இடையூறு ஏற்படுத்துவதாகவும் இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி தெரிவித்துள்ளார்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், வட்டாட்சியர் வேளச்சேரி அவர்கள் நில ஆவணங்களின் அடிப்படையில் வழங்கிய பட்டாவில் பிளாக் எண் 194 சர்வே எண் 16–ன்படி மேற்கூறிய இடம் சென்னை மாநகராட்சி பூங்கா என குறிப்பிடப்பட்டுள்ளது. (பட்டா நகல் இணக்கப்பட்டுள்ளது). பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 13, பகுதி 39, கோட்டம் 177, வேளச்சேரி, வி.ஜி.பி. செல்வா நகர் 1வது பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சிறுவர் விளையாட்டுத்திடல் உள்ளது. இந்த சிறுவர் விளையாட்டுத்திடல் கடந்த 2000ஆம் ஆண்டு கட்டப்பட்டு சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர் (வழக்கு எண். O.S.No.4625 of 2014, ஆணை நாள் 15.06.2024) இந்த வழக்கில் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒருதலைபட்ச தீர்ப்பு (Exparte) வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வி.ஜி.பி. செல்வா நகர் 1வது பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சிறுவர் விளையாட்டுத்திடலில் உள்ள 25 வருடகால மரங்களை எவ்வித உரிமையும் இல்லாமல் வெட்டிவிட்டனர். இது சம்மந்தமாக கேட்க சென்ற பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களை அவதூறாக பேசினர்.

இதன் தொடர்ச்சியாக வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் வி.ஜி.பி. செல்வா நகர் 1வது பிரதான சாலையில் உள்ள சிறுவர் விளையாட்டுத்திடல் சென்னை மாநகராட்சி சொந்தமானதால், மேற்கூறிய இடத்தில் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளும் பணியினை உடனடியாக நிறுத்த ஆய்வாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) ஜே.7 வேளச்சேரி காவல் நிலையம் அவர்களிடம் புகார் அளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கும்படி 05.02.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் காரணமாக உதவி ஆய்வாளர் அவர்களின் தலைமையில் நேரில் சென்று மரம் வெட்டப்படுவது நிறுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும் பாதி மரங்களை வெட்டி கனரக வாகனத்தில் எடுத்து சென்றுவிட்டனர்.

இந்நிலையில் 05.04.2025 அன்று காலை மீண்டும் மேற்கூறிய வேளச்சேரி, வி.ஜி.பி. செல்வா நகர் முதலாவது பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சிறுவர் விளையாட்டுத்திடலில் இருந்த மீதமுள்ள மரங்களை திரு. கண்ணன் என்பவரின்

தலைமையில் மரங்கள் வெட்டப்படுவதாக திரு. குமாரராஜா என்பவரிடமிருந்து வந்த தொலைபேசி தகவலின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13 திருமதி. பிரேமலதா உதவி செயற்பொறியாளர், பகுதி 39, திரு.முகமது உசேன், உதவி பொறியாளர் வார்டு 177 மற்றும் திரு மணிமாறன், உதவி பொறியாளர் வார்டு 176 ஆகியோர்கள் நேரில் சென்று பார்த்தபோது திரு. கண்ணன் என்பவரின் தலைமையில் மரங்கள் வெட்டப்படுவதை நிறுத்தும்படி தெரிவித்தும் அவர் தொடர்ந்து மரங்களை வெட்டி கொண்டிருந்தார். அப்போது வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பவர் ஏஜெண்டாக இருப்பதாக திரு உத்திரியநாதன் என்பவர் குறுக்கிட்டு பேசியபோது உதவி செயற்பொறியாளர், பகுதி 39 உதவிபொறியாளர் வார்டு 177 மற்றும் உதவி பொறியாளர், வார்டு 176 ஆகியோர்கள் திரு உத்திரியநாதன் அவர்களிடம் தற்போது வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பவர் ஏஜெண்டாக உள்ள விவரங்களை அளிக்கும்படி கேட்டனர். மேலும் திரு. கண்ணன் என்பவர் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் எந்தவிதத்தில் தொடர்புடையவர் என்ற விவரமும் தெரியவில்லை. அதற்கான ஆதாரமும் அவர் காண்பிக்கவில்லை.

மேலும் இவ்வழக்கு சம்மந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சி, முதுநிலை சட்ட அலுவலர், சட்ட குழுமம் அவர்களின் மூலம் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய 03.03.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி, முதுநிலை சட்ட அலுவலர், சட்ட குழுமம் அவர்களிடம் மேற்கூறிய வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 02.05.2025 அன்று திரு உத்திரியநாதன் மற்றும் திரு. கண்ணன் ஆகியோர்கள் தெற்கு வட்டார துணை ஆணையர் அவர்களை சந்தித்து சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மாநகராட்சி அலுவலர்கள் எந்தவித இடையூறுகளும் ஏற்படுத்தக் கூடாது என கேட்டுக் கொண்டனர். ஆனால் தெற்கு வட்டார துணை ஆணையர் அவர்கள் வட்டாட்சியர், வேளச்சேரி அவர்கள் அளித்த நில ஆவணங்களில் விவரப்படி வி.ஜி.பி. செல்வா நகர் 1வது பிரதான சாலையில் உள்ள இடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது என்றும் மேலும் இது சம்மந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளதாக 01.09.2025 நாளிட்ட கடிதத்தில் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளனர்.

03.10.2025 மற்றும் 13.03.2026 நாளிட்ட இம்முறைமன்ற நடுவத்தின் கடிதங்களில் மேற்கூறிய பொருள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டது.

தற்போது 20.05.2026 நாளிட்ட கடிதம் ம.அ.13. ந.க. எண் 3503/2025–2ல், "05.05.2026 அன்று உதவி பொறியாளர், வார்டு–177 அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் உள்ள சட்ட குழுமத்தில் முதுநிலை சட்ட அலுவலர் மற்றும் சட்ட அலுவலர் ஆகியோர்களை நேரில் சந்தித்து மேற்கூறிய பணி சம்பந்தமான மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு விவாதித்ததில் முதுநிலை சட்ட அலுவலர் அவர்கள் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் வேளச்சேரியில் உருவாக்கப்பட்ட லேஅவுட்டில் தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள திறந்த வெளி நிலத்தின் அளவீடுகளின் விவரங்களை வேளச்சேரி வட்டாட்சியர் அவர்களின் அலுவலகத்தில் உள்ள விவரங்களுடன் சரிபார்க்கும் படி தெரிவித்துள்ளார்கள். இதன் அடிப்படையில் வட்டாட்சியர் வேளச்சேரி அவர்களுக்கு 14.05.2026 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வட்டாட்சியர், வேளச்சேரி அவர்கள் அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

4. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 23.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 06.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"(1) V.G.P. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், சைதாப்பேட்டை வட்டம், வேளச்சேரி கிராமத்தில் உள்ள சர்வே எண் 317/1A1–ல் (தற்போது சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ளது) ஒரு மனைப்பிரிவை (layout) உருவாக்கியது. இந்த மனைப்பிரிவுத் திட்டம், சென்னை–செங்கல்பட்டு மண்டல நகரமைப்புத் திட்டமிடல் துணை இயக்குநரால் 22.03.1978 தேதியிட்ட ஒப்புதல் எண் 16/73–ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டது. இந்த மனைப்பிரிவு "VGP செல்வா நகர்" என்று பெயரிடப்பட்டது.

(2) குறிப்பிட்ட அந்த மனைப்பிரிவுத் திட்டத்தில் 208 வீட்டு மனைகள், சாலைகள் மற்றும் பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட பகுதி மற்றும் குழந்தைகள் விளையாடும் பகுதி ஆகியவை அமைக்கப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி, மனைப்பிரிவின் கிழக்குப் பகுதியில் சுமார் 32,620 சதுர அடி பரப்பளவு பொதுப் பூங்காவாகவும், 15,840 சதுர அடி பரப்பளவு குழந்தைகள் விளையாடும் இடமாகவும் குறிக்கப்பட்டுள்ளன; அதேபோல், மனைப்பிரிவின் மேற்குப் பகுதியில் சுமார் 23,900 சதுர அடி பரப்பளவு குழந்தைகள் விளையாடும் இடமாகக் குறிக்கப்பட்டுள்ளது. V.G.P. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், வேளச்சேரி ஊராட்சிக்குச் சாதகமாக 22.03.1978 தேதியிட்ட தானப் பத்திரத்தை (Gift Deed) எழுதி, பொதுச் சாலை, பூங்கா மற்றும் குழந்தைகள் விளையாடும் பகுதிக்காக 3,82,855 சதுர அடி நிலத்தை வேளச்சேரி ஊராட்சிக்குத் தானமாக வழங்கியது. ஆனால், மனைப்பிரிவில் உள்ள 12,000 சதுர அடி பரப்பளவு கொண்ட பள்ளிப் பகுதி 22.03.1978 தேதியிட்ட தானப் பத்திரத்தின்போதோ அல்லது இன்று வரையோ V.G.P. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் வேளச்சேரி ஊராட்சிக்குத் தானமாகவோ அல்லது ஒப்படைக்கவோ படவில்லை.

(3) "V.G.P. செல்வா நகர்" (V.G.P. Selva Nagar) என்ற மனைப்பிரிவில் உள்ள பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பகுதி V.G.P. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (V.G.P. Housing Private Limited) நிறுவனம் தன் வசமே வைத்துள்ளது. 30.07.2014 அன்று, முன்னறிவிப்பு ஏதும் வழங்காமல் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் குறிப்பிட்ட அந்தச் சொத்து அமைந்துள்ள பகுதிக்கு அத்துமீறி நுழைவதன் மூலம் V.G.P. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான அந்தச் சொத்துப்பகுதியை ஆக்கிரமித்தனர்.

(4) சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் இருவர் மீது, V.G.P. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்தில் (City Civil Court) O.S.No.4625/2014 என்ற எண்ணில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்து. சென்னை மாநகராட்சி அதிகாரிகள் தங்கள் தரப்பு எழுத்துப்பூர்வமான விளக்கத்தை (written statement) தாக்கல் செய்தனர்; இருப்பினும், பள்ளி விளையாட்டு மைதானம் என்பது குழந்தைகளுக்கான பூங்காவாக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் பட்டா அல்லாத பிற ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு மாண்புமிகு நீதிமன்றம் உத்தரவிட்டபோது, அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறினர்.

(5) பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பாக யாரும் ஆஜராகாமல் இருந்த காரணத்தினால் மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டறிந்த பின்னர், மாண்புமிகு நீதிமன்றம் 15.06.2024 அன்று சென்னை மாநகராட்சி ஆணையர், உதவி ஆணையர், மண்டலம் 13–ன் உதவிப் பொறியாளர் மற்றும் அவர்களது ஆட்கள், முகவர்கள் அல்லது பணியாளர்கள் ஆகியோர், சட்டரீதியான நடைமுறைகளைப் பின்பற்றாமல், வழக்குச் சொத்தில் எந்த வகையிலும் தலையிடுவதையோ அல்லது அத்துமீறி நுழைவதையோ தடுக்கும் வகையில் நிரந்தரத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது;

எனவே, இச்சூழ்நிலையில், பின்வரும் நிவாரணங்களை வழங்குமாறு புகார்தாரர் கண்ணியத்துடன் இம்மாண்புமிகு தீர்ப்பாயத்தை வேண்டிக்கொள்கிறார்:

(1) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ன் அலுவலர்கள் ஆகியோர், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்குள் நுழைவதிலிருந்தும், புகார்தாரரைத் துன்புறுத்துவதிலிருந்தும் விலகி இருக்குமாறு உத்தரவிட வேண்டும்.

(2) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திலிருந்து விளையாட்டுப் பொருட்கள் ஏதேனும் இருப்பின், அவற்றை அகற்றுமாறு 1–வது எதிர்வாதிக்கு உத்தரவிட வேண்டும்.

(3) எனவே, V.G.P. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான, V.G.P.செல்வா நகரில் அமைந்துள்ள 12,000 சதுர அடி நிலங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ன் அலுவலர்கள் 15.06.2024 நாளிட்ட தீர்ப்பின்படி, அத்துமீறி நுழைவதை தடுக்கவும், அவர்களின் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர மாநகராட்சி மண்டலம் 13–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 06.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''திரு.உத்ரியநாதன் அவர்கள் அளித்த மனுவில் வேளச்சேரி கிராமம் வி.ஜி.பி. செல்வா நகர் மனைப்பிரிவு (மனைப்பிரிவு எண்.LPDM/DDTP No.16/73) வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் மூலம் கடந்த 1978ஆம் ஆண்டு 208 வீட்டு மனைப்பிரிவு உருவாக்கப்பட்டது என்றும், தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது போல் 382855 சதுர அடியில் கிழக்கு பக்கம் உள்ள மனைப்பிரிவில் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டு திடலுக்காக முறையே 32650 சதுர அடி மற்றும் 15840 சதுரடி ஒதுக்கப்பட்டதாகவும், மேற்கு பக்கம் உள்ள மனைப்பிரிவில் 23900 சதுரடி சிறுவர் விளையாட்டு திடலுக்காக ஒதுக்கப்பட்டதாகவும் இதில் 12000 சதுர அடி பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை தானமாக வழங்கவில்லை அல்லது வேளச்சேரி பஞ்சாயத்திற்கு இது நாள் வரை வழங்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இது குறித்து V.G.P. நிறுவனத்தால் பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறுவர் விளையாட்டு திடல் கட்டியதன் காரணமாக வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து (வழக்கு எண்.O.S.No.4625/2014), அவ்வழக்கில் நாள் 15.06.2024 நாளிட்ட தீர்ப்பில் இந்த வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், சென்னை உயர்நீதி

மன்ற தீர்ப்பை மதிக்காமல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ல் உள்ள அரசு அதிகாரிகள் இடையூறு ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 13, பகுதி 39, கோட்டம் 177, வேளச்சேரி, வி.ஜி.பி. செல்வா நகர் 1வது பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சிறுவர் விளையாட்டுத்திடல் உள்ளது. இங்கு வட்டாட்சியர் வேளச்சேரி அவர்கள் நில ஆவணங்களின் அடிப்படையில் வழங்கிய பட்டாவில் பிளாக் எண் 194 சர்வே எண்16–ன்படி மேற்கூறிய இடம் சென்னை மாநகராட்சி பூங்கா என குறிப்பிடப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக கேட்க சென்ற பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களை அவதூறாக பேசினர்.

இதன் தொடர்ச்சியாக வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் வி.ஜி.பி. செல்வா நகர் 1வது பிரதான சாலையில் உள்ள சிறுவர் விளையாட்டுத்திடல் சென்னை மாநகராட்சி சொந்தமானதால், மேற்கூறிய இடத்தில் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளும் பணியினை உடனடியாக நிறுத்த ஆய்வாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) ஜே.7 வேளச்சேரி காவல் நிலையம் அவர்களிடம் புகார் அளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கும்படி 05.02.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் காரணமாக உதவி ஆய்வாளர் அவர்களின் தலைமையில் நேரில் சென்று மரம் வெட்டப்படுவது நிறுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும் பாதி மரங்களை வெட்டி கனரக வாகனத்தில் எடுத்து சென்றுவிட்டனர்.

இந்நிலையில் 05.04.2025 அன்று காலை மீண்டும் மேற்கூறிய வேளச்சேரி, வி.ஜி.பி. செல்வா நகர் முதலாவது பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சிறுவர் விளையாட்டுத்திடலில் இருந்த மீதமுள்ள மரங்களை திரு. கண்ணன் என்பவரின் தலைமையில் மரங்கள் வெட்டப்படுவதாக வந்த தகவலின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13 உதவி செயற்பொறியாளர், பகுதி 39, உதவி பொறியாளர் வார்டு 177 மற்றும் உதவி பொறியாளர் வார்டு 176 ஆகியோர்கள் நேரில் சென்று பார்த்தபோது திரு. கண்ணன் என்பவரின் தலைமையில் மரங்கள் வெட்டப்படுவதை நிறுத்தும்படி தெரிவித்தும் அவர் தொடர்ந்து மரங்களை வெட்டி கொண்டிருந்தார் அப்போது வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பவர் ஏஜெண்டாக இருப்பதாக திரு உத்திரியநாதன் என்பவர் குறுக்கிட்டு பேசியபோது திரு உத்திரியநாதன் அவர்களிடம் தற்போது வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பவர் ஏஜெண்டாக உள்ள விவரங்களை அளிக்கும்படி கோரப்பட்டது. ஆனால் ஆவணங்கள் ஏதும் அளிக்கப்படவில்லை.

மேலும் இவ்வழக்கு சம்மந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சி, முதுநிலை சட்ட அலுவலர், சட்ட குழுமம் அவர்களின் மூலம் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய 03.03.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி, முதுநிலை சட்ட அலுவலர், சட்ட குழுமம் அவர்களிடம் மேற்கூறிய வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது 20.04.2026 நாளிட்ட கடிதத்தில், 05.05.2026 அன்று உதவி பொறியாளர், வார்டு–177 அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் உள்ள சட்ட குழுமத்தில் முதுநிலை சட்ட அலுவலர் மற்றும் சட்ட அலுவலர் ஆகியோர்களை நேரில் சந்தித்து மேற்கூறிய பணி சம்பந்தமான மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு விவாதத்தின் போது மேற்கண்ட வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் லேஅவுட்டில் குறிப்பிடப்பட்டுள்ள

சதுரடிக்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 2.10 ஏக்கர் தானமாக வழங்கப்பட வேண்டும். ஆனால் தான செட்டில்மெண்டில் 1.66 ஏக்கர் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே முதுநிலை சட்ட அலுவலர் அவர்கள் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் வேளச்சேரியில் உருவாக்கப்பட்ட லேஅவுட்டில் தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள திறந்த வெளி நிலத்தின் அளவீடுகளின் விவரங்களை வேளச்சேரி வட்டாட்சியர் அவர்களின் அலுவலகத்தில் உள்ள விவரங்களுடன் சரிபார்க்கும் படி தெரிவித்துள்ளார்கள். இதன் அடிப்படையில் வட்டாட்சியர் வேளச்சேரி அவர்களுக்கு 14.05.2026 நாளிட்ட கடிதம் மற்றும் 31.07.2026 நாளிட்ட நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வட்டாட்சியர், வேளச்சேரி அவர்கள் அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்."

7. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 13–ன் உதவி அணையாரின் அறிக்கைகள் மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை–42, வேளச்சேரி கிராமத்தில் "VGP செல்வா நகர்" என பெயரிடப்பட்ட மனைப்பிரிவு வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் மூலம் கடந்த 1978ஆம் ஆண்டு 208 வீட்டு மனைப்பிரிவு உருவாக்கப்பட்டது என்பதும் தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது போல் 382855 சதுர அடியில் கிழக்கு பக்கம் உள்ள மனைப்பிரிவில் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டு திடலுக்காக முறையே 32650 சதுர அடி மற்றும் 15840 சதுரடி ஒதுக்கப்பட்டதாகவும், மேற்கு பக்கம் உள்ள மனைப்பிரிவில் 23900 சதுரடி சிறுவர் விளையாட்டு திடலுக்காக ஒதுக்கப்பட்டதாகவும் இதில் 12000 சதுர அடி பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை தானமாக வழங்கவில்லை அல்லது வேளச்சேரி பஞ்சாயத்திற்கு இதுநாள்வரை வழங்கவில்லை என்பதும் மேலும் பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறுவர் விளையாட்டு திடல் கட்டியதன் காரணமாக வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No4625/2014 தொடர்ந்து சிட்டி சிவில் நீதிமன்றம் 15.06.2024 நாளிட்ட ஆணையில் வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பை பொருட்படுத்தாமல், V.G.P. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான V.G.P.செல்வா நகரில் அமைந்துள்ள 12,000 சதுர அடி நிலங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ன் அலுவலர்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்குள் அத்துமீறி நுழைவதை தடுக்கவும், அவர்களின் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திலிருந்து விளையாட்டுப் பொருட்கள் ஏதேனும் இருப்பின், அவற்றை அகற்றுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 13, பகுதி 39, கோட்டம் 177, வேளச்சேரி, வி.ஜி.பி. செல்வா நகர் 1வது பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சிறுவர் விளையாட்டுத்திடல் கடந்த 2000ஆம் ஆண்டு கட்டப்பட்டு சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதும், வட்டாட்சியர் வேளச்சேரி

அவர்களின் நில ஆவணங்களின் அடிப்படையில் வழங்கிய பட்டாவில் பிளாக் எண் 194 சர்வே எண் 16–ன்படி மேற்கூறிய இடம் சென்னை மாநகராட்சி பூங்கா என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், இதன் தொடர்ச்சியாக வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் வி.ஜி.பி. செல்வா நகர் 1வது பிரதான சாலையில் உள்ள சிறுவர் விளையாட்டுத்திடல் சென்னை மாநகராட்சி சொந்தமானதால், மேற்கூறிய இடத்தில் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளும் பணியினை உடனடியாக நிறுத்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13 உதவி செயற்பொறியாளர், பகுதி 39, உதவி பொறியாளர் வார்டு 177 மற்றும் உதவி பொறியாளர் வார்டு 176 ஆகியோர்கள் நேரில் சென்று பார்த்தபோது திரு. கண்ணன் என்பவரின் தலைமையில் மரங்கள் வெட்டப்படுவதை நிறுத்தும்படி தெரிவித்தும் அவர் தொடர்ந்து மரங்களை வெட்டி கொண்டிருந்தார் என்பதும், அப்போது வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பவர் ஏஜெண்டாக இருப்பதாக திரு உத்திரியநாதன் என்பவர் குறுக்கிட்டு பேசியபோது, அன்னாரிடம் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பவர் ஏஜெண்டாக உள்ள விவரங்களை அளிக்கும்படி கோரியும், ஆவணங்கள் ஏதும் அளிக்கப்படவில்லை என்பதும், இந்நிலையில் வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No4625/2014 தொடர்ந்து 15.06.2024 நாளிட்ட ஆணையில் வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், மேலும் இவ்வழக்கு சம்மந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சி, முதுநிலை சட்ட அலுவலர், சட்ட குழுமம் அவர்களின் மூலம் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய 03.03.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், இப்பொருள் தொடர்பாக 05.05.2026 அன்று வார்டு–177, உதவி பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் உள்ள சட்ட குழுமத்தின் முதுநிலை சட்ட அலுவலர் மற்றும் சட்ட அலுவலர் ஆகியோர்களை நேரில் சந்தித்து மேற்கூறிய பணி சம்பந்தமான மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு விவாதித்ததில், முதுநிலை சட்ட அலுவலர் வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் வேளச்சேரியில் உருவாக்கப்பட்ட லேஅவுட்டில் தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள திறந்த வெளி நிலத்தின் அளவீடுகளின் விவரங்களை வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள விவரங்களுடன் சரிபார்க்கும் படி தெரிவித்துள்ளதன் அடிப்படையில் வேளச்சேரி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், வேளச்சேரி வட்டாட்சியர் அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13 உதவி ஆணையரின் அறிக்கைகள், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–42, வேளச்சேரி கிராமம் வி.ஜி.பி. செல்வா நகர் மனைப்பிரிவில் 12000 சதுர அடி பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சிறுவர் விளையாட்டுத்திடல் கடந்த 2000ஆம் ஆண்டு கட்டப்பட்டு சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருவதை ஆட்சேபித்து வி.ஜி.பி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.O.S.No4625/2014 15.06.2024 நாளிட்ட ஆணையில் எதிர்தரப்பு ஆஜராகாத நிலையில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு (Exparte) வழங்கப்பட்டது என்றாலும், வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் வி.ஜி.பி. செல்வா நகர் 1வது பிரதான சாலையில் உள்ள சிறுவர் விளையாட்டுத்திடல் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது என்பதால், உதவிப் பொறியாளர், வார்டு–177 பெருநகர சென்னை மாநகராட்சியின்

சட்ட குழுமத்தின் முதுநிலை சட்ட அலுவலர் மற்றும் சட்ட அலுவலர் ஆகியோர்களை நேரில் சந்தித்து விவாதித்தின் அடிப்படையில், வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் வேளச்சேரியில் உருவாக்கப்பட்ட லேஅவுட்டின் தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள திறந்த வெளி நிலத்தின் அளவீடுகளின் விவரங்களை வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள விவரங்களுடன் சரிபார்க்க வேளச்சேரி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றும், வேளச்சேரி வட்டாட்சியர் அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளார் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, வேளச்சேரி வட்டாட்சியரிடம் விவரங்களை பெற்று, உரிய சட்ட பூர்வ நடவடிக்கை விரைந்து எடுத்து அதன் அறிக்கையினை 31.10.2026–க்குள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைத்திட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13–ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு அக்டோபர் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. P.உத்ரியநாதன்
கதவு எண்.1A, கே.வி.கே சாமி தெரு,
நேரு நகர், வேளச்சேரி,
சென்னை–600 042.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) உதவி ஆணையர் (முதுநிலை),
மண்டலம் 13, பெருநகர சென்னை மாநகராட்சி,
115, டாக்டர் முத்துலெட்சிமி சாலை,
அடையாறு, சென்னை–600 020.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ. கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.